

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியை ஏற்று, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர்,சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில், ரிஷிவந்தியம் ஒன்றியம், பழைய சிறுவங்கூர் ஊராட்சியை சேர்ந்த, அதிமுக அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் கே.எல்.ரவிச்சந்திரன்,லா.கூடலூர் மு.ஊ.மன்ற தலைவர், அதிமுக அம்மா பேரவை ஒன்றிய பொருளாளர் வழக்கறிஞர் எம்.கொளஞ்சியப்பன், பள்ளிப்பட்டு மு.ஊ.மன்ற தலைவர் அதிமுக மு.மேலவை பிரதிநிதி, கே.பரசுராமன், கீழ்ப்பாடி ஊராட்சி தேமுதிக கிளைக் கழக செயலாளர் என்.விஸ்வநாதன், அதிமுக மு.இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை ஜம்படை கே.ரங்கநாதன், அதிமுக ஒன்றிய இணைச் செயலாளர் ஜம்படை கே.கிருஷ்ணமூர்த்தி, ஜம்படை இளைஞர் பாசறை இ.மணிகண்டன் மற்றும் அ.சின்னராஜ் ஆகியோர் அ.தி.மு.க. மற்றும் தே.மு.தி.க.வில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டார், புதிதாக கழகத்தில் இணைந்த மாற்றுக் கட்சியினருக்கு அமைச்சர் எ.வ.வேலு கழக வேட்டி அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.



உளுந்து மற்றும் பச்சை பயறுக்கான காப்பீட்டு தொகையை பெற்றுத் தந்த தமிழக முதல்வர் அவர்கள், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோருக்கு மயிலாடுதுறை மாவட்ட காவேரி டெல்டா பாசனதாரர் முன்னேற்ற சங்கம் சார்பில் நன்றியினை தெரிவித்தனர்.



பண்டிகையை முன்னிட்டு, பொதுமக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு எவ்வித இடையூறுமின்றி, பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறப்பு பேருந்துகளை சென்னையில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் சென்று ஆய்வு செய்தார். உடன் போக்குவரத்துக்கழக அதிகாரிகள் உள்ளனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டம் – சின்ன சேலம் வட்டம் – ஈரியூர் கிராமத்தில்

# சிலிண்டரில் எரிவாயு கசிவு - ஒருவர் உயிரிழப்பு!

## குடும்பத்தினருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் – ரூ. 3 லட்சம் நிவாரணம் அறிவிப்பு!

**சென்னை, அக். 20-**

**கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் வட்டம், ஈரியூர் கிராமத்தில் L.P.G. சிலிண்டரில் ஏற்பட்ட எரிவாயு கசிவின் காரணமாக வீடு தீப்பிடித்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி - அறிவித்துள்ளார்.**

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் வட்டம், ஈரியூர் கிராமத்தில் வசிக்கும் பொன்னுசாமி (வயது 58) த/பெ.துரைசாமி மற்றும் அவரது மனைவி திருமதி.அனுசுயா (வயது 50) ஆகிய இருவரும் கடந்த 13.10.2025 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் அவர்களது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக L.P.G. சிலிண்டரில் ஏற்பட்ட எரிவாயு கசிவின் காரணமாக வீடு முழுவதும் எரிவாயு பரவியிருந்த நிலையில் லைட்டர் பற்ற வைத்தபோது திடீரென தீப்பிடித்து வீடு முழுவதும் சேதம் ஏற்பட்ட நிலையில் மேற்படி திரு.பொன்னுசாமி மற்றும் அவரது மனைவி திருமதி.அனுசுயா ஆகிய இருவருக்கும் பயங்கர தீக்காயம் ஏற்பட்டு உடனடியாக கள்ளக்குறிச்சி அரசு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் திரு.பொன்னுசாமி என்பவர் 16.10.2025 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி.அனுசுயா என்பவருக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த திரு.பொன்னுசாமி அவர்களின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

### சித்த மருத்துவ, தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்கம் உட்பட

# 18 சட்ட மசோதாக்கள் பேரவையில் நிறைவேற்றம்!

சென்னை, அக்.20-

சட்டப்பேரவை கூட்டத்தின் நிறைவு நாளான நேற்று, தனி யார் மற்றும் சித்த மருத்துவ பல்கலைக் கழகங்கள் உருவாக் கும் சட்டம் உட்பட 18 சட்ட மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. சட்டப்பேரவையில் ஊரக உள்ளாட்சிகளில் கழிவுநீக்க செயல்பாடு களுக்கு உரிமம் வழங்கும் வகையில் ஊராட்சிகள் சட்டத்திருத்த முன்வடிவை அமைச்சர் ஐ.பெரியசாமி நேற்று அறிமுகம் செய்தார். நெடுஞ்சாலை, கடல் சரக்கு போக்குவரத்தில் குற்றங்கள் குறித்து, நீதிமன்ற வழக்கு கள் வரும் போது, சிறைதண் டனை, அபராதம் விதிப்பதை தவிர்த்து பணம் சார்ந்த உரிமை யியல் தண்டத் தொகை விதிப் பதை செயல்படுத்தும் வகையில், நெடுஞ்சாலைத் துறை, கடல்சார் வாரிய சட்டங்களில் திருத்த முன்வடிவுகளை அமைச்சர் எ.வ. வேலு அறிமுகம் செய்தார்.

மின்துறை, தொழிற்கல்வி நிலையங்கள், தனியார் கல் லூரிகளில் பணம் சார்ந்த தண் டத்தொகை விதிப்பதை செயல் படுத்தும் சட்ட முன்வடிவுகளை அமைச்சர்கள் சிவசங்கர் மற்றும் கோவி.செழியன் ஆகியோர் அறிமுகம் செய்தனர்.

அதேபோல், சமய நிறுவனங்கள் கல்வி நிறுவனங்களை நிறு வுதல், பராமரித்தல், அர்ச்சகர்கள், இசைக்கலைஞர்கள், ஓதுவார்கள், அத்யாபகர்கள், வேதபாராயணம் செய்பவர்களுக்கான பயிற்சிப் பள்ளிகளை நிறுவ இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான மசோ தாவை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிமு கம் செய் தார். இதைத் தொடர்ந்து, நிதி யொதுக்கச் சட்டமுன்வடிவை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிமுகம் செய்தார்.

இவற்றைத் தொடர்ந்து, இந்த சட்ட முன்வடிவுகள், ஆய்வு செய்யப்பட்டு நிறை வேற்றப்பட்டன. இவைதவிரகடந்தாண்டு பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்பட்டு, ஆளுநரால் திருப்பியனுபப்பட்ட நிதிநிலை நிர்வாக பொறுப்புடைமை திருத்தச்சட்ட முன்வடிவு மீண்டும் நிறை வேற்றப்பட்டது. மேலும், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்கள் ஓய்வூதி யம் உயர்வு, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழுவில் மாற்றுத்திற னாளிகளை நியமித்தல், வழக் கிழந்த சட்டங்களை நீக்கும் நீக்கறவு சட்ட முன்வடிவுகள்,ஊராட்சிகளின் தனி அலுவலர் கள் பதவிக்காலத்தை மேலும் 6 மாதத்துக்கு நீடித்தல், ஊரகஉள்ளாட்சிகளில் கழிவுநீக்க செயல்பாடுகளுக்கு உரிமம் வழங்குதல் ஆகிய சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

இதுதவிர, ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்ட முன் வடிவு, சித்த மருத்துவப் பல் கலைக்கழகம் உருவாக்குதல், தனியார் பல்கலைக்கழகங்கள்

உருவாக்குதல், பல்கலைக் கழகங்களில் ஆசிரியரல்லா பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வா ணையம் மூலம் நிரப்புவதற் கான சட்ட முன் வடிவுகள் என 18 சட்ட முன்வடிவுகள் நேற்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டன.



முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்டம் துவங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் 15.7.2025 முதல் மூன்று கட்டங்களாக உங்களுடன் ஸ்டாலின் திட்டம் உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர், குந்தா, கூடலூர்,பந்தலூர் ஆகிய பகுதிகளில் உள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளில் நடைபெற்று வருகிறது . இதுவரை சுமார் 146 முகாம்கள் நடைபெற்றது. இம்முகாமினை மாவட்ட ஆட்சியர், கூடுதல் ஆட்சியர், துணை ஆட்சியர்கள் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். குன்னூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக தலைமை அரசு கொறடாவுமான கா. ராமச்சந்திரன் நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்றுவரும் பெரும்பாலான முகாம்களில் கலந்து கொண்டு முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு முகாமின் சிறப்பம்சம் பற்றி பொதுமக்களிடம் கலந்துரையாடி வருவதால் அனைத்து தரப்பு மக்களின் பாராட்டைப் பெற்று வருகிறார்.



திராவிட மாடல் ஆட்சியின் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க 13.10.2025 அன்று அதிகாலை வால்பாறை அடுத்த ஊமாண்டிமுடக்கு பகுதியில் வசிக்கும் மாரியப்பன் சுகன்யா என்பவரின் 2 1/2 வயது குழந்தை மழலை ஹேமா ஸ்ரீ மற்றும் மாரியப்பன் தாயார் அஞ்சலை (வயது 57) ஆகிய இருவரும் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்ததை அறிந்து பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இதில் வால்பாறை நகர கழக செயலாளர் குட்டி சுதாகர், நகர்மன்றத் தலைவர் அழகு சுந்திரவள்ளி உள்பட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை இருதய ஆண்டவர் அரசு உதவிப் பெறும் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்பு 2025 விழாவில் கலந்து கொண்டு தனக்கு கல்வி பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா நன்றி கூறினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. அருணா தலைமை விருந்தினராகவும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதை பித்தன், கவிஞர் தங்க மூர்த்தி உள்ளிட்ட பள்ளியின் முன்னாள் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கொளத்தூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, அக். 20-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 241 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (18.10.2025), கொளத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 67அ, கென்னடி ஸ்கொயர், திருவள்ளூர் தெரு. 2) வட்டம் 66அ, அய்யாலு தெரு, வெற்றி நகர், சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர் காலத்தையும் யாருக் காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி. மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ். பன்னீர்செல்வம், துரை கண்ணன், ம.அசோக் குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், டி.யோகப் பிரியா, என்.தாவூத்பீ, பி.அமுதா, சி. ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என். பொன்முடி, கே.ஜார்ஜ் குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திர சேகர், எஸ்.முருகன், எம்.பி. தமிழ்ச்செல்வன், என். சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம். ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிர தீப்குமார், அன்பரசன், ஆதவன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.வி. மலையன்

### அக்டோபர் 21 (2024)



**கழகம் துவக்கப்பட்டபோதே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**சென்னை மாவட்டத்தில் சூளைமேடு வட்டச் செயலாளராகவும் – நீண்டகாலம் தென்சென்னை மாவட்ட அவைத்தலைவராகவும் – தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகத் தலைவர் சென்னை மாநகர மேயராக பொறுப்பு வகித்தபோது சென்னை மாநகராட்சி மன்ற ஆளுங்கட்சித் தலைவராகவும், 2001–2006ல் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**